

## உலக மாற்றுத்திறனாளிகள் தினம் மற்றும் 11 & 12 ஆம் பணிநியமன விழா

உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று 03-12-2015 நமது பள்ளி மாணவன் A.ராஜேஸ்குமாரை, மதுரை தொழில் வர்த்தக சங்கத்தின் முதுநிலைத் தலைவர் உயர்திரு.S.ரத்தினவேல் அவர்கள், கண்ணன் டிபார்ட்மென்ட் ஸ்டோரில் உதவியாளர் பணிக்கான பணிநியமனம் செய்து கௌரவித்தார்கள்.அதே போல் நமது பள்ளி மாணவியான A.ஹெப்சிபாவை மதுரை பாத்திமா கல்லூரியின் முதல்வர் Dr.Sr.K.பாத்திமா மேரி அவர்கள், பெத்சான் சிறப்பு பள்ளியில் உதவி பராமரிப்பாளர் பணிக்கான பணி நியமனம் செய்து கௌரவித்தார்கள். இந்நிகழ்ச்சியில் கண்ணன் டிபார்ட்மென்ட் ஸ்டோர் துணை பொது மேலாளர் திரு.திருக்குமரன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். பள்ளியின் தலைவர் திரு.ஜெயசீலன் மற்றும் முதல்வர் திரு.ரவிக்குமார் உடன் உள்ளனர்.



குடும்ப சுற்றுலாவாக மைசூரிலுள்ள சுற்றுலாத் தலங்களை பார்வையிடுவதற்கு டிசம்பர் 4&5 அன்றுபள்ளி மாணவர்கள், பெற்றோர்கள்,உடன்பிறந்தவர்கள் மற்றும் ஆசிரியர்கள் என 150 பேர் சுற்றுலாத்தலங்களை பார்த்து மகிழ்ந்தார்கள். இந்நிகழ்ச்சியானது பெத்சான் குடும்பத்தினருக்கு புதிய உற்சாகத்தையும், மன அழுத்தத்தைக் குறைக்கவும் உதவியாக இருந்தது.





நமது பள்ளியில் பொங்கல், ஓணம், கிறிஸ்துமஸ் போன்ற பல்வேறு பண்டிகைகள் மற்றும் தேசிய விழாக்கள் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுகள் மாணவர்களுக்கு புதிய உற்சாகத்தையும், ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் தந்தது.



பள்ளியில் நான்கு மாதங்களுக்கு ஒருமுறையாக நடத்தப்பட்டு வரும் பெற்றோர் ஆலோசனைக் கூட்டத்தில் மருத்துவர்கள்,சமூக அறிஞர்கள், கல்வியாளர்கள், சட்ட ஆலோசகர்கள் போன்றவர்களின் சிறப்புரை வழங்கப்படுகிறது.கடந்த 26.9.2015 அன்று மனிதத்தேனி திரு.சொக்கலிங்கம் ஆலோசனை வழங்கினார்கள்.


தொடர்பு முகவரி

Since 1996

**பெத்சான் சிறப்பு பள்ளி**

( மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கானது )

தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றது & மத்திய அரசின் பதிவு பெற்றது

3/369 - B, சிக்கந்தர் சாவடி, மதுரை - 625 018.

Phone : 0452 - 2 660 770 ; 98949 28666 ; 9894476662

E-mail : bethshanschool@gmail.com | F:www.facebook/bethshanschool | Website : www.bethshanschool.org




Since 1996

# BETHSHAN
SPECIAL SCHOOL

# நிகழ்வுகள் 2015
ஆண்டு அறிக்கை

அன்புடையீர், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பெத்சான் சிறப்பு பள்ளியின் வாழ்த்துக்களும், வணக்கங்களும். பெத்சான் சிறப்பு பள்ளியானது கடந்த 19 ஆண்டுகளாக மதுரை, சிக்கந்தர் சாவடியில் மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக தமிழக அரசின் அங்கீகாரமும் மத்திய அரசின் தேசிய அறக்கட்டளையில் பதிவுபெற்ற நிறுவனமாகவும் செயல்பட்டுவருகின்றது. கடந்த வருடத்தில் பள்ளியின் மூலம் அநேக காரியங்களை சிறப்பான முறையில் செய்து வந்துள்ளோம். அவற்றில் முக்கியமான சில நிகழ்வுகளை மட்டும் தொகுத்து ஆண்டறிக்கையாக உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

சிறப்பு குழந்தைகளின் வாழ்வில் நல்ல முன்னேற்றங்களை பெற்று சமூகத்தில் இவர்களும் ஒரு அங்கமாக உயர்வதற்கு நீங்களும் எங்களுடன் இணைந்து எல்லா நிலைகளிலும் உங்களுடைய ஒத்துழைப்பையும், ஆதரவையும் கொடுத்து வருவதற்காக உங்களுக்கு எங்களது உளம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். நாங்கள் உங்களை சந்தித்து இக்குழந்தைகளின் நலன்பற்றி பேசும்பொழுதெல்லாம் நீங்கள் தரும் நல்ல ஆலோசனைகளுக்காகவும், வழிகாட்டுதலுக்காகவும், நீங்கள் மகிழ்ச்சியுடன் செய்துவரும் அனைத்து உதவிகளுக்காவும், இக்குழந்தைகள் யாவரும் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும் என்கிற உங்களது ஜெபங்களுக்காகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடவுள் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் மெய்யான ஆசீர்வாதங்களைத் தந்து ஆசிர்வதிப்பாராக. நீங்கள் காட்டும் அன்பையும், உதவியையும் இனிவரும் நாட்களிலும் தொடர்ந்து செய்திட உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவசியம் குடும்பத்தோடு எமது பள்ளியை பார்வையிட்டு இந்த சிறப்புக் குழந்தைகளோடு உங்கள் அன்பை பகிர்ந்து கொள்ள அன்புடன் அழைக்கிறேன். உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

நன்றி.

சமூக பணியில்,
R.ரவிக்குமார்
முதல்வர்

உங்கள்
இருதயம்
கலங்காதிருப்பதாக ;
தேவனிடத்தில்
விசுவாசமாயிருங்கள்.
- பைபிள் -



**2016**
இனிய
புத்தாண்டு
நல்வாழ்த்துகள்



உலக மனநல நாளான அக்டோபர் 10 ஆம் தேதி  மாவட்ட அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நமது பள்ளியும், ஜே.ஸி.ரெஸிடென்ஸியும்  இணைந்து நடத்தியது. உலக மனநல நாளின் இவ்வருட கருப்பொருளை மதுரை மாவட்ட கூடுதல் ஆட்சியர் திருமதி.B.ரோஹினி ராம்தாஸ் I.A.S., அவர்கள் வெளியிட்டு போட்டிகளை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள். அதன் முதல் பிரதியை ஜே.ஸி.ரெஸிடென்ஸியின் திருமதி.ஜெயஸ்ரீ ஜெயபால் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு தாசில்தார் திருமதி.G.புஸ்பாதேவி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.M.ஜெயசீலன், ரெய்ன் இரிகேஷ்ன் நிறுவன மேலாளார்,திரு.N.மனோஜ் மற்றும் கவிஞர் முல்லை நடவரசு ஆகியோர் பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழையும் வழங்கினார்கள். மதுரை மாவட்டத்திலுள்ள 13 சிறப்பு பள்ளிகளைச் சார்ந்த மனவளர்ச்சிக் குறைந்த சுமார் 85 பேர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

October 10, 2015
You Are Not Alone
World Mental Health Day

நமது பள்ளியும், மதுரை பாத்திமா கல்லூரியும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளோம். இவ் ஒப்பந்தத்தில் கல்லூரியின் சார்பில் முதல்வர் Dr.Sr.K.பாத்திமா மேரி அவர்களும், பெத்சான் சிறப்பு பள்ளியின் சார்பில் நிர்வாக அறங்காவளர், போதகர் D.ஸ்டீபன்சன் அவர்களும் கையெழுத்திட்டார்கள். இதன் மூலம் பாத்திமா கல்லூரியும், நமது பள்ளியும்  பல்வேறு நிகழ்ச்சிகளை மாணவர்களின் நலன் கருதி இணைந்து செயல்படுத்திட உறுதி கொண்டுள்ளோம்.







சர்வதேச அளவில் அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் கடந்த ஜுலை-2015ல் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் வாலிபால் விளையாட்டில் இந்திய அணியில் தமிழகத்தின் சார்பாக நமது பள்ளி மாணவரான திரு.முத்துக்குமார் விளையாடி வெண்கலப் பதக்கம் வென்று வந்தார். வெற்றி பெற்ற மாணவன் முத்துக்குமாருக்கு நமது பள்ளியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக வடமலையான் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் Dr.புகழகிரி வடமலையான், பி.டி.ஆர்.அறக்கட்டளை நிர்வாகி திரு.M.திருமூர்த்தி,மதுரை மாநகராட்சியின் நகரப் பொறியாளர் Er.A.மதுரம், மேக்ஸ் பிராப்பர்ட்டீஸ் நிர்வாக இயக்குனர் Er.K.இளங்கோ பாக்யராஜ், மனநல மருத்துவர் Dr.V.ராமானுஜம் மற்றும் மதுரை மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.S.முருகன் ஆகியோர் கலந்து கொண்டு பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள். சிவா மோட்டார்ஸ் உரிமையாளர் திரு.A.வீரமணி அவர்கள் சார்பாகவும் , வடமலையான் மருத்துவமனை சார்பாகவும் தலா ரூ.10 ஆயிரம் பரிசுத்தொகை முத்துக்குமாருக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மொர்க்கென்டைல் வங்கியின் மூலம் நமது பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாருதி இகோ புதிய வாகனம் ஒன்றினை நன்கொடையாக வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியின் போது  தமிழ்நாடு  மொர்க்கன்டைல் வங்கியின் நிர்வாக இயக்குநர்  திரு.உபேந்திர காமத் அவர்கள் புதிய வாகனத்தின் சாவியை பள்ளியின் முதல்வர் திரு.ரவிக்குமார் மற்றும் ஒருங்கிணைப்பாளர் திரு.ஜெயபால் அவர்களிடம் வழங்கினார்கள். உடன் மொர்க்கன்டைல் வங்கியின் இயக்குநர் முனைவர்.பெரிஸ் மகேந்திரவேல் மற்றும் வங்கியின் இதர நிர்வாகிகளும் இருந்தார்கள்.







உலக தாத்தா பாட்டி தினத்தன்று நமது பள்ளியும், மதுரை லேடி டோக் கல்லூயும் இணைந்து சிறப்பு குழந்தைகளின் தாத்தா, பாட்டிகளை கௌரவிக்கும் வகையில் சிறப்பான நிகழ்ச்சிகளை நடத்தியது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக பெனிட் அன் கோ நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.பெனிட்கரன் அவர்கள் வந்திருந்த தாத்தா பாட்டிகளுக்கு சிறப்பு பரிசளித்து வாழ்த்தி கௌரவித்தார்கள். இந்நிகழ்ச்சியில் லேடி டோக் கல்லூரியின் சமூக அறிவியல் மாணவிகள் தாத்தா பாட்டிகளோடு கலந்துரையாடினார்கள். அன்றையதினம் திரு.ஷாஜகான் அவர்களின் தலைமையிலான பாடல் குழுவினர் இன்னிசையில் அழகான பாடல்களை பாடி மகிழ்வித்தனர்.

நமது பள்ளி மாணவர்களில் சிலர் முதல் முறையாக கொடைக்கானலில் அமைந்துள்ள வானவெளி ஆராய்ச்சி மையத்தை பார்வையிட்டு அதன் செயல்பாடுகளை கண்டறிந்தனர். இது மாணவர்களுக்கு சூரியன், சந்திரன், நட்சித்திரங்கள் மற்றும் கோள்கள் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் புரிந்து கொள்ளுதலை ஏற்படுத்தியது.



ஒவ்வொரு வருடமும் நமது பள்ளி மாணவர்களுக்கு கொடைக்கானல் மலைப் பகுதிகளில் மலையேற்றப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இதனால் மாணவர்களின் உடல் ஆரோக்கியம் மேம்படுவதோடு, இயற்கைப்பற்றிய புரிந்து கொள்ளுதலும், புதிய இடமாற்றங்கள் மற்றும், குளிர் கால தட்ப நிலையை உணர்வதற்கும் உதவியாக இருந்தது.

